நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CMP. No.702/2025

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(புகார்தாரர் தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுஜாதா |
| தந்தை / கணவர் பெயர் | : | ஐயப்பன் |
| கிராமம் | : | சேலம் பேர்லேன்ஸ் |
| வட்டம் | : | சேலம் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | 45 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,ஏப்ரல் மாதம், 17–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**சத்தியபிரமாண வாக்குமூலம்** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.30 PM

1. நான் தற்போது சேலம் ஆரோக்கியா மருத்துவமனையில் துணை தலைவராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணையின் பேரில் ஆஜராகி இன்று சாட்சியம் அளிக்கிறேன். உமாநாத் மற்றும் வினித்ரா ஆகிய இருவருக்கும் கடந்த 20.08.2018 ம் தேதி ஆண் குழந்தை பிறந்தது. இதுசம்மந்தமாக தயார் செய்யப்பட்ட சிகிச்சை குறிப்புகளை சான்றிட்டு தாக்கல் செய்கிறேன்.

2. என்னிடம் காட்டப்படுவது மேற்படி எங்களது மருத்துவமனையில் மேற்படி தம்பதியினருக்கு பிறந்த குழந்தையின் பிறப்பு சான்றிதழ்தான். மேற்படி மருத்துவ சிகிச்சை குறிப்புகளில் நோயாளி குறித்து உள்ள தனிப்பட்ட தகவல்கள் நோயாளி மற்றும் அவருடன் உடன் இருப்பவர்கள் தெரிவித்ததன் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்டது ஆகும்.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 12.35 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CMP. No.702/2025

## P.W.3 –ன் வாக்குமூலம்

**(புகார்தாரர் தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மா.செல்வம் |
| தந்தை / கணவர் பெயர் | : | மாணிக்கம் |
| கிராமம் | : | மேட்டூர் ஓம்சக்தி கோவில்அருகில் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW3 |
| வயது | : | 58 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,ஏப்ரல் மாதம், 17–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**சத்தியபிரமாண வாக்குமூலம்** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.36 PM

1. நான் தற்போது மேட்டூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். சார் பதிவாளருக்கு சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது. அவரின் சார்பாக சாட்சியம் அளிக்க எனக்கு ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளார். அதனடிப்படையில் நான் ஆஜராகி இன்று சாட்சியம் அளிக்கிறேன்.

2. 21.09.2021 மற்றும் 23.06.2023 ஆகிய தேதிகளில் உள்ள கிரய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அழைப்பாணை வந்தது. 21.09.2021 ஆவண எண்.3926/2022 – ராமசாமி மகன் புண்ணியமூர்த்தி என்பவர் உமாநாத் அவர்களின் மனைவி வினித்ரா என்பவருக்கு கிரயமாக எழுதிக்கொடுத்த ஆவணத்தை இன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன்.

3. 23.06.2023 ஆவண எண்.2369/2023 – அய்யம்பெருமாள் மகன் உமாநாத் என்பவர் உமாநாத் அவர்களின் மனைவி வினித்ரா என்பவருக்கு கிரயமாக எழுதிக்கொடுத்த ஆவணத்தை இன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணங்களை எழுதிக்கொடுத்த மற்றும் எழுதி வாங்கியவர்களின் ஆதார் எண்ணை இணைத்துள்ளனர்.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.40 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**